## திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

**அ.வ.எண்: 21/2025**

**வா.சா.1**

**நாள்: 03.07.2025**

வாதி தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44 ஆம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | தங்கமணி |
| தந்தை பெயர் | சின்னசாமி |
| கிராமம் | வளப்பக்குடி |
| வட்டம் | திருவையாறு |
| தொழில் | விவசாயம் |
| வயது | 65 |

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இவர் மூலம் கீழ்காணும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | வள்ளியம்மை இறப்பு சான்றிதழ் உண்மை நகல். |
| 2 | வா.சா.ஆ.2 | பிச்சையம்மாள் இறப்பு சான்றிதழ் எடு குறிப்பு (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| 3 | வா.சா.ஆ.3 | பிச்சையம்மாள் வாரிசு சான்றிதழ் உண்மை நகல். |
| 4 | வா.சா.ஆ.4 | வாரிசு சான்று கோரிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான குறிப்பு இணையதள பதிவிறக்க நகல். |
| 5 | வா.சா.ஆ.5 | தங்கமணி ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| 6 | வா.சா.ஆ.6 | முத்துலெட்சுமி ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| 7 | வா.சா.ஆ.7 | மணிகண்டன் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

| | | |
|---|---|---|
| 8 | வா.சா.ஆ.8 | ஆறுமுகம் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| 9 | வா.சா.ஆ.9 | பிரியா ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| 10 | வா.சா.ஆ.10 | எழில்ராணி ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| 11 | வா.சா.ஆ.11 | சோமசுந்தரம் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| 12 | வா.சா.ஆ.12 | தினேஷ் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன வள்ளியம்மை எனக்கு என்ன உறவு என்றால் உடன்பிறந்த சகோதரி. வள்ளியம்மை பொன்னம்பலம் தம்பதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் பிச்சையம்மாள் என்ற ஒரே மகள் ஆவார். வள்ளியம்மையின் பெற்றோரும் எனது பெற்றோரும் ஒருவரே என்றால் சரிதான் அவர்கள் உயிருடன் இல்லை. வள்ளியம்மைக்கு நான் நேரடி வாரிசு இல்லை என்பதால் எனக்கு வாரிசு சான்று கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேலும் அரசாங்கத்திற்கு எதிராக வழக்கு தொடுக்கவேண்டுமென்றால் இரண்டுமாத கால அவகாசம் வழங்க வேண்டும் அவ்வாறு வழங்காததால் நான் கோரும் வாரிசு உரிமை சான்று எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

/ஒ.ம்/
திரு.P. ரமேஷ், B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.